செ.வெ.எண்: 38 நாள்: 18.10.2021

கரூர் மாவட்டம்

# கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – கோ–ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆப., அவர்கள் தகவல்

---

அதன் விபரம் வருமாறு:

கரூர் நகரப்பகுதியில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.10.2021) வாடிக்கையாளர் ஒருவருக்கு புடவையினை வழங்கி துவக்கிவைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 1935 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 86 ஆண்டுகளாக கோஆப்டெக்ஸ் நிறுவனம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடிகளுடன் கைத்தறி துணிரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு அசல் ஜரிகையுடன்கூடிய காஞ்சிபுரம் பட்டு புடவைகள், ஆரணி பட்டுப் புடவைகள், மென்பட்டுபுடவைகள் என பல்வேறு ரகங்களில் பட்டு புடவைகளும், கோவை, மதுரை, பரமக்குடி, திருச்சி மற்றும் சேலம் பகுதிகளில் தயாராகும் அனைத்து ரக காட்டன் புடவைகளும், ஆர்கானிக் மற்றும் களம்காரி ரக காட்டன் புடவைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு தமிழக அரசு 30 சதவீத தள்ளுபடி வழங்குகின்றது. அனைத்து வாடிக்கையாளர்களும் பயன்பெறக்கூடிய வகையில் அனைத்து விடுமுறை நாட்களிலும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இயங்கும். கோ–ஆப்டெக்ஸ் கனவு நனவு திட்டம் எனப்படும் மாதாந்திர திட்டம், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு 30 சதவீதம் வரையில் வட்டியில்லா கடன் வசதி வழங்கப்படுகின்றது.

நடப்பாண்டிற்கான விற்பனை இலக்காக ரூ.1கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரும் கைத்தறி ஆடைகளை வாங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், கோ–ஆப்டெக்ஸ் முதுநிலை மண்டல மேலாளர் திரு.அ.கோபால், நகராட்சி ஆணையர் திரு.ராமமூர்த்தி, கைத்தறி துணிநூல் துறை உதவி இயக்குநர் திரு.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.